சிவமயம்

gistered as a News paperin Ceylon
P. M. G. NO. H. A 59/300 of 1939.

# இந்துசாதனம்

ஸ்தாபித வருஷம் (1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத. ருஅ] யாழ்ப்பாணம்— விய ஞூ ஆனிமீ எஉ (1946 ஜூன் 21 வெள்ளிக்கிழமை) [இல உஉ

# சுயராஜ்யமா? அடிமைக்குழியா?

## இலங்கையின் புதிய அரசியல்

### பிரதான அதிகாரங்கள் பிரிட்டிஷாரிடம்: அடிமைக்குழியை அழத்தோண்டும் சித்திரம்

### எதிரிக்குச் சகுனப் பிழையாகட்டும் என்று தன் மூக்கு அறுக்கும் சேனநாயக்கா

(நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்)

**வீண் தம்பட்டம்**

ஓர் கூற்றின் நியாயா நியாயம், சொல்பவனின் கெட்டித்தனத்திலும், கேட்பவனின் பேய்த்தனத்திலும் தங்கியிருக்கிறது. இக்கூற்றின் உண்மை இலங்கைக்கு அளிக்கப்பட்டுள்ள புதிய அரசியற்றிட்டத்தால் நன்கு புலனாகின்றது இதோ பிடி சுயராஜ்யம் என்றார் குடியேற்றநாட்டு மந்திரி: இதோ பெற்றுக்கொண்டேன் என்று சாஷ்டாங்கம் போடுகிறார் மிஸ்ரர் சேனநாயக்கா! ஆனால் சுயராஜ்யம் அடிமை வாழ்வு என்பவற்றுக்கிடையே வித்தியாசம் தெரியாத மிஸ்ரர் சேனநாயக்கா, குதிரைக்கும் கழுதைக்கும் பேதம்அறியாத சேனநாயக்கா, தாம் ஏதோ வரப்பிரசாதம் பெற்றதாக உலகெங்கும் தம்பட்டம் அடிக்கிறார்.

○

**சில நூதன அம்சங்கள்**

புதிய அரசியற் றிட்டப்படி இப்போதுள்ள அரசாங்கசபை ஒழிந்துவிட அந்த இடத்துக்குப் பாராளுமன்றம் ஏற்படும். பாராளுமன்றத்தில் இரு பிரிவுகள் உண்டு. ஒன்று பொதுஜனங்களால் தெரியப்பட்டுள்ள அங்கத்தவர்களைக் கொண்டது மற்றது மேற்சபை. இதில் 30 அங்கத்தவர்களிருப்பர். அவர்களில் 15 பேர் பொதுமக்களால் தெரிந்தெடுக்கப்படுபவராயும், 15 பேர் தேசாதிபதியால் நியமிக்கப்படுபவராயு மிருப்பர். சிறுபான்மைப்பிரதிநிதிகள் செனேற் சபையில் இடம் பெறுதற்காகவே, தேசாதிபதி 15 பேரை நியமிக்க வேண்டும் என்ற நியதி ஏற்பட்டிருக்கிறது. கீழ்ச்சபையிற் பெரும்பாலரான அங்கத்தவரின் ஆதரவைக் கொண்ட ஒருவர் பிரதம மந்திரியாகத் தேசாதிபதியால் நியமிக்கப்படுவர். இலங்கையின் அரசியல் நிருவாகம் செவ்வனே நடைபெறுவதற்கு ஜவாப்தாரி பிரதம மந்திரியேயாவர். ஆனால் இந்தப் பாராளுமன்றத்துக்கு வெளிநாட்டு வியவகாரங்களிற் பிரவேசிக்கவோ, இலங்கையின் இராணுவப் பாதுகாப்பு விஷயத்தில் ஏதும் செய்யவோ, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினின்றும் பிரியவோ எவ்வகையான அதிகாரமுமில்லை.

○

**கழுத்தை நெரிக்கலாம்**

இலங்கையின் கழுத்தை இதுகாறும் நெரித்துவந்த பிரகாரம், இனியும் நெரிப்பதற்குப் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளுக்குப் பூரண உரிமை உண்டு; இலங்கையின் பாதுகாப்புககாக என்ன என்ன சட்டங்கள் இயற்றவேண்டும் எனத் தாம் கருதுவதைப் பிரிட்டிஷ் அரசாங்கம் இயற்றலாம். இதன் முக்கிய நோக்கம் என்ன? கீழ்த்திசையில் உள்ள கடற்பாதைகளைக் கண்காணிப்பதற்கு ஏற்ற ஓர் தளமாக இலங்கையைப் பிரிட்டிஷார் வைத்திருக்கப்போகிறார்கள். ஏற்கெனவே எகிப்தில், இன்னும் மற்றும் இடங்களில் பிரிட்டிஷாரின் செல்வாக்குக் கடகடத்துப் போய்விட்டது. இந்தியா கைபறியும் தறுவாயில் இருக்கிறது. எனவே, இலங்கையை பிரிட்டிஷார் அடிமைப் படுத்தத் தீர்மானித்திருப்பதில்என்ன அதிசயம்?

○

**எதிரிக்குச் சகுனப் பிழை**

தன் மூக்கைப் போனாலும் எதிரிக்குச் சகுனப் பிழையாகட்டும் என்று ஒருவன் தன் மூக்கை அறுத்துக் கொண்டு தனது பகைவன் போகும் வழியில் நின்றானாம். அதே நிலையில் தான் இன்று மிஸ்ரர் சேனநாயக்காவும் அவர் குழுவினரும் நின்று அலங்கோலப்படுகின்றனர். உள்நாட்டு வியவகாரங்களில் தமக்குப் பூரண சுதந்திரம் கிடைத்துவிட்டது: அதன் பயனாகப் பதவிகளை வேண்டியபடி வகித்துக்கொள்ளலாம் என்ற ஓர் சுயநலக் காரணத்தினால், அவர்கள் இலங்கையைக் காட்டிக் கொடுத்துவிட்டார்கள். 6000 மைல்களுக்கப்பால் இருக்கிற இங்கிலாந்தைக் கட்டிக் கொண்டு இருப்பதிலும் பார்க்க, அந்நாட்டின் பந்தத்தை அறுத்து, அயல் நாடாகிய பரதகண்டத்துடன் இணைந்திருக்க இவர்களுக்குப் புத்தி வரவில்லை. இதன் பலாபலன்களைச் சிங்கள‌த் தலைவர்கள் அனுபவிக்கும்காலம் வெகு தூரத்திலில்லை.

○

**இலங்கையில் இந்தியர் நிலை**

இலங்கைவாழ் இந்தியர் நிலைமை குறித்து இலங்கைச் சமதர்மக் கட்சித் தலைவராகிய டக்ரர் எஸ். ஏ. விக்கிரமசிங்க ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இப்போது உருளிவெளியில் நிகழும் சம்பவங்கள், இலங்கையின் அரசியல் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போட. ஏதுவாகும் என்றும் இந்தியர், இலங்கையர் என்னும இரு சாராரும் இப்பிரச்சினையைச் சமரசமாகத் தீர்த்து வைத்தல் வேண்டும் எனறும் அவர் தமது அறிக்கையிற் குறிப்பிடுகிறார். இலங்கையில் 5 ஆண்டுகள் வசித்து இந்த நாட்டையே தமக்குத் தாயகமாகக் கொள்ள விரும்பும் இந்தியர் அனைவர்க்கும் பிரஜாவுரிமை வழங்கி, இலங்கையர்க்குரிய சகல உரிமைகளையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். தேசத்தின் முன்னேற்றத்துக்குப் பங்கம்விளைக்க எண்ணும் சில சுயநலமிகள் இலங்கைவாழ் இந்தியரின் உரிமைகளை நசுக்கக் கங்கணம் கட்டி நிற்கின்றனர். யுத்தம் தொடங்க முன், இலங்கையில் இந்தியர்-இலங்கையர் மனக்கசப்பு இங்கே யிருந்து மிகக் கேவலநிலையிற் கொண்டுபோய் விட்டது. அப்படியான நிலை இனியும் ஏற்படாமல் சகல பிரச்சினைகளையும் சமரசமாகத் தீர்த்துக் கொள்ளுதல் வேண்டும்என டக்ரர் விக்கிரமசிங்க கூறுகிறார்.

## அவமானம்!

### யாழ்ப்பாணம் பொலிஸ் விடுதிகள்

### அவற்றை இடித்துவிட யோசனை

யாழ்ப்பாணம் பொலிஸ் தானத்துக் கணித்தாக, அங்குள்ள பொலிஸ் படையினர் வசிக்கும் வீடுகள் மிகவும் நெருக்கமாக, சுகாதாரமற்ற முறையில் இருப்பதால் அவற்றைத் தனக்கு இருக்கும் அதிகாரத்தைக் கொண்டு இடிப்பித்து மட்டமாக்க யோசிப்பதாக, யாழ்ப்பாணம் நகரசபைத் தலைவர் திரு க. பொன்னம்பலம் பொலிஸ் விசாரணைச் சபையினர்க்கு எடுத்துக்கூறினார்.

இந்த வீடுகள் மிகவும் நெருக்கமாக யாழ்ப்பாண நகரத்தின் மத்தியில் இருக்கின்றன எந்தச் சீர்திருந்திய அரசாங்கமும் இப்படியான நிலையங்களைத் தனது காரியாலயத்துக்கு அணித்தாக வைத்திருக்கமாட்டா. இவை இந்த நகரத்துக்கே அவமானத்தைத் தரக்கூடியன என்பது ஸ்ரீ பொன்னம்பலத்தின் கருத்து.

## நாடு வேண்டுமாம்!

### அபிசீனிய மன்னர் அவா!

### ஐக்கிய நாடுகளுக்கு வேண்டுகோள்!

மகாயுத்தத்தில் தோல்வியடைந்துள்ள இத்தலியின் பழைய நாடுகளை எவ்வாறு தமக்கிடையே பிரிப்பது என்னும் விஷயத்தில், ருஷியா பிரான்ஸ் இங்கிலாந்து அமெரிக்கா என்னும் நான்கு வல்லரசுகளுக்குமிடையே பரஸ்பரம்பிணக்கு நேர்ந்திருக்கிறது ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனமே அந்நாடுகளைக் கூட்டாகப்பரிபாலிக்க வேண்டும்என்று ஓர்யோசனையும், அல்லது அந்நாடுகளை இற்றலியே தர்மகர்த்தாஎன்ற தன்மையில் பரிபாலிக்கவேண்டும் என்ற இன்னோர் யோசனையும் விவாதிக்கப்படுகிறது. அந்நாடுகளில் ஒன்றாகிய எறித்திரியா, முற்காலத்தில் தம்முடையதாகவிருந்ததென்றும், அதனை இற்றலி பலாத்காரமாகப் பறித்துக்கொண்டபடியால், மீண்டும் அந்நாட்டைத் தமக்கே ஒப்படைக்க வேண்டும் என்றும் அபிசீனியச் சக்கரவர்த்தி ஹெயிலி செலாஸி ஓர்வேண்டுகோளை இப்போது விடுத்திருக்கிறார்.

# கேவல மனப்பான்மை

### இலங்கை மக்களின் நாகரிக மோகம்

(—:—:—)

### ஸ்ரீ ஜாத் ஆனேயின் கண்டனம்

கொழும்பு அரசாங்க ஆயுர்வேத கலாசாலைப் பிரதமாசிரியரான டக்ரர் A. N. N. பணிக்கர் அவர்கள் இம் மாதத்துடன் தம் பதவியினின்றும் இளைப்பாறுகின்றார் அவர்க்குப் பிரியாவிடை கூறுவதற்காகச் சென்ற வாரம் கொழும்பு மையிலன் சினிமா மண்டபத்தில் ஓர் பொதுக்கூட்டம் கூடியது அதிற் பேசிய இந்திய அரசாங்கப் பிரதிநிதியான ஸ்ரீ ஜாத் எம் எஸ் ஆனே அவர்கள் டக்ரர் பணிக்கர் ஆயுர்வேத சாஸ்திரத்தின் புனருத்தாரணத்திற்காக இலங்கையில் ஆற்றிய சேவையை விதந்து கூறி இலங்கை மக்களின் மேனாட்டு நாகரிக மோகத்தைப்பற்றிப் பின் வருமாறு குறிப்பிட்டார்:

"இலங்கை மேனாட்டு நாகரிகத்தை அப்படியே பின்பற்றி வருகிறது. இது மாத்திரமல்ல; மேனாட்டிலிருந்து இலங்கைக்கு இறக்குமதியாகும் சரக்கு எதுவாகவிருப்பினும் சரி, கலை, கலாசாரம் நாகரிகம் மற்றும் பொருள்களாயினும் சரி அவற்றின்மீது இலங்கை மக்கள் அதிக மோகம் கொண்டுள்ளனர். காலாகாலத்தில் ஆயுர்வேதசாஸ்திரத்தைக் காப்பதற்கான தகுந்த முயற்சிகளை நாம் செய்து கொள்ளத் தவறினால் இந்தச் சாஸ்திர சம்பந்தமாக நமது முன்னோர்களால் நமக்குக் கிடைத்திருக்கும் ஓர் அரிய பெரிய பொக்கிஷத்தை நாம் இழக்க நேரிடும்."

## அகில இலங்கைத் தமிழர் மகாநாடு

மேற்படி மகாநாட்டின் இரண்டாவது வருடாந்தக் கூட்டம், வருகிற ஆகஸ்டு மீ 10-ந் திகதி யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நிகழும் என அறிகிறோம்.

## வேலை வேண்டாமாம்!

இப்போது நடைமுறையில் இருக்கும் குடியேற்றத் திட்டத்துக்கு 12000 பேர் தேவைப்படுகிறது. இலங்கையில் 30000 பேருக்குமேல் இப்போது வேலையின்றியிருக்கிறார்கள் ஆனால் இவர்களில் 60 பேர் மாத்திரமே குடியேற்றத் திட்டங்களில் வேலைசெய்ய விரும்புகின்றனர். மற்றவர்களுக்கு இப்படியான வேலை செய்ய விருப்பமில்லை என்று போக்குவரத்து மந்திரி மிஸ்ரர் ஜே. எஸ் கொத்தலாவலை கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஹு
ஆனிமீ ௭ வெள்ளிக்கிழமை.


## கொழும்பு விவேகானந்தசபை

கொழும்புவிவேகானந்தசபையாரின் நாற்பத்துமூன்றாமாண்டு அறிக்கைப் பிரதி யொன்று கிடைக்கப்பெற்றோம்; இச்சபையானது காலந்தோறும் பல்லாற்றானும் விருத்தியடைந்து வருகின்றதென்பது இச் சபையார் ஆண்டுதோறும் வெளியிடும் சபை அறிக்கைப் பிரதியைக் கொண்டு அறியத்தகும். இச் சபையானது சைவ சமயத்தின் விருத்தியையிட்டும், தமிழ்மொழியின் வளர்ச்சியையிட்டும் தமிழ் மக்களின் ஈடேற்றத்தையிட்டும் பல்லாற்றானும் மனப்பூர்வமாக இடையறா ஊக்கத்துடன் உழைத்துவருகிறது. மேலும் பலவிதமான நவீன கிளர்ச்சிகள், எங்கள் சாதி சமயம் பாஷை தேசமென்னும் இந்நான்கு விஷயத்திலும் கிளர்ந்து பரம்பி ஒன்றோடொன்று முரண்பட்டு விபரீதம் விளைக்கும் இந்தக் காலத்திலே, இவைகளுக் கெல்லாம் ஏற்ற தலமாகிய கொழும்புமாநகரிலே, இந்த விவேகானந்த சபையானது "மழைக்கால் இருட்டானாலும் மந்தி கொம்பிழக்கப் பாயாது" என்றாங்கு தனது சிறந்த சைவக்கொள்கை, ஆசாரம், அநுஷ்டானம் முதலியவற்றிலே சிறிதேனுந்திறம்புதலின்றித் தொன்மை மறவாமல் விருத்தியோடு நடைபெற்று வருதல் அற்புதத்தினும் அற்புதமாகும்; மேலும் இச்சபையானது இது போன்ற ஏனைய சபைகளுடன் மாறுபடுதலின்றி, தான் எடுத்துக்கொண்ட விஷயத்திலேயே கண்ணுங் கருத்துமா யிருத்தல் பாராட்டற்பாலது.

இச்சபை கைக்கொண்டு செய்துவரும் முயற்சிகள் சைவசமயத்தவர்கட்குச் சிறப்பாகவும் ஏனைய சமயத் தமிழருக்கும் ஏனைய சாதியினர் சமயத்தவர்க்கும் பொதுவாகவும் உழைத்து வருகின்றதென்பது, இச்சபை ஈடுபட்டுழைத்துவரும் பல துறைகளைக் கொண்டு அறிதலாகும்.

இச்சபையார் வைத்து நடத்தும் புத்தகசாலை, வாசகசாலை, புத்தகவிக்கிரயத்திற்காகியசாலை யென்னு மிவைகள் எவர்க்கும் பொதுவாகப்பயன்படத்தக்கன.

மேற்படி சபையார் நடாத்திவரும் சமய குரவர் குருபூசை, சந்தானகுரவர் குருபூசை, நாவலர் விவேகானந்த சுவாமி முதலிய பெரியார் குருபூசைகள் சைவசமயத்தவர்களுக்கே பெரிதும் பயன்றருவன; இச்சபையார் அநுஷ்டிக்கும் ஆடியமாவாசை போன்ற விரத தினங்களும், கொண்டாடும் தமிழ் வருடப்பிறப்பு முதலிய தினங்களும் முறையே சைவ மக்களுக்குந் தமிழ்மக்களுக்கும் பயன் விளைப்பனவாம். மேலும் காலந்தோறும் சபையார்மூலஞ் செய்யப்படுஞ் சிறந்த பிரசங்கங்கள் சைவசமயம், தமிழ்மொழி, மக்களின் ஒழுக்கம், தொன்மை பாராட்டல் என்னுமிவைகளைப் பேணி வளர்ப்பனவாகும்.

சிறைச்சாலையில் வசிப்பவர்களாகிய சைவ மறியற்காரர்பொருட்டும், குஷ்டரோக வைத்தியசாலையிலிருக்கும் மேற்படிரோகிகள் பொருட்டும் காலந்தோறும் செய்யப்படும்பிரசங்கங்கள் புண்ணியமானவை. இச் சபையினர் ஆண்டுதோறும் நடாத்தி வரும் அகில இலங்கைச் சைவசமயப் பரீட்சைகள் மிகவும் மேலான நோக்கோடு செய்யப்படும் சைவத் தொண்டாகும்; தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களைப் பத்தியொடுந் திறமையொடும் பாராயணஞ் செய்தற்காகிய தேர்தலும் சிறந்த சமயத் தொண்டாகும்.

மேலேசொல்லப்பட்டதொண்டுகளைக் காட்டிலும் இச்சபையார் செய்துவருஞ் சிறந்த தொண்டு, இச்சபையார் ஸ்தாபித்து இனிதுநடாத்திவரும் வித்தியாலயமாகும். இவ்வித்தியாலயத்தில் ஒன்பது உபாத்தியாயர்கள் கல்வி பயிற்ற, 214 சிறுவரும் 249 சிறுமியரும் தமிழ் ஆங்கிலமென்னு மிருமொழிகளையும் (சைவ முறையிற்) பயின்று வருகின்றனரெனக் குறித்த அறிக்கைப் பிரதியில் வெளியிடப்பட்டுள்ளது. இவ் வித்தியாலயம் மேன்மேலும் விருத்தியுறுக.

இச்சபை 839 அங்கத்தவர்களைக் கொண்டதாயிருத்தல் ஊக்கந் தரற்பாலதாகும்; குறித்த அங்கத்தவர்கள் உதவவேண்டிய அங்கத்துவப் பணத்தை அற்றைவரையில் 600 பேர்மாத்திரம் கொடுத்துவிட, 120 பேர் இன்னமுங் கொடுத்தலின்றி(ப் பாக்கியாக) விட்டிருக்கின்றனரெனக் குறிக்கப்பட்டிருத்தல் சிறிது கவலைதருவதாகும்; அவர்கள் தாம் கொண்ட பராமுகத்தை யறவேயகற்றிச் சபையின் விருத்தியைச் சிந்தையிற்கொண்டு பணவுதவி செய்தலே முறையும் கடனுமாகும். இச்சபையார் ஆற்றிவருந் தொண்டுகள் இன்னும் பலவெனினும் விரிவஞ்சி விடுத்தாம். இச்சபையார் தாம் ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கும் ஆண்டு அறிக்கைப் பிரதியைத் தமிழ்மொழியில் எழுதி வெளியிட்டிருப்பரேல் இன்னும் அதிகபயன்றரும்; இலங்கையின் ஏனைய பாகங்களிலுள்ள சைவ சமயத்தைப்பரிபாலிக்குஞ்சபைகளும், சைவக்கல்வியை விருத்தி செய்யுஞ் சங்கங்களும் இந்த விவேகானந்தசபையின் கொள்கைகளையும் முயற்சியையும் பின்பற்றுவதனால் மேலும் நன்மையுண்டாம்.

## இலவச வைத்திய வசதி

இப்போது இலங்கை வைத்தியசாலைகளில், மாதம் 50 ரூபாவுக்குமேல் வருமானம் பெறுபவர்கள சிகிச்சைக்கு வந்தால் அவர்களிடம் மருந்துக்குரிய கிரயம் அறவிடப்படுகிறது. இனி அப்படி அறவிடாமல், எல்லார்க்கும் இலவச வைத்தியம் செய்யவேண்டும் [illegible] தீர்மானித்திருக்கிறது.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—104)

### "மனுஷன் காயம் அநித்தியம்"

நிச்சயிக்கப்பட்ட வரன் பட்டினப் பக்கத்திலுள்ள ஒரு கலாசாலையில் உயர்தர வகுப்பிற் படிக்கின்றாரென்றும், அவருடைய பரீட்சை நடைபெறுதற்கு ஒருமாச முண்டென்றும் அப்பரீட்சை நடந்தபின்தான் விவாகம் நடத்துவதென்றும் என் சிறிய தந்தையாரும் வந்தவர்களும் கலந்து பேசி நிச்சயம் பண்ணிக்கொண்ட பின், வந்தவர்கள் தம் ஊருக்கு மீண்டு போய்விட்டார்கள். அதன் பின் ஒருநாள் என் சிறியதந்தையார் என்னைக் கூப்பிட்டு, "மகளே, மனுஷன் காயம் அநித்தியம்; நான் இருக்கும்போதே உன் கருமங்களைப் பார்த்து வைத்தல் வேண்டும்; உனக்கு ஒரு தக்க விவாகம் ஒழுங்கு செய்திருக்கிறேன்; அன்று இங்கு வந்த வாலிபன்தான் உனக்கென நிச்சயிக்கப்பட்ட வரன்; அவன் குலங்குடி கோத்திரஞ் சூத்திரம் எல்லா விஷயத்திலும் எங்களோடு ஒத்தவனென்று அறிந்தேன்; இந்தச் சம்பந்தம் எனக்கு மாத்திரமல்லாமல், உன் சிறியதாயார் தங்கை என்னு மிவர்களுக்குஞ் சம்மதம்: இந்தக் காலத்திலே கோயிற்பூசை பண்ணிக்கொண்டிருப்பதானால் அதிக வருவாயில்லை, மதிப்புமில்லை; உத்தியோகம் பார்ப்பார்க்கே வருவாயுண்டு நடப்புண்டு என்று சொல்லுகிறார்கள்: அந்த வாலிபனை நிலோ உயர்தர வகுப்பிற் படிக்கிறான்; விரைவிலே பரீட்சை நடக்குமாம்; பரீட்சையிற் சித்தியெய்தக் கூடிய விவேகியென்று ஆளைப் பார்க்கவே புலப்படுகின்றது; இவைகளையெல்லாம் உத்தேசித்துத்தான் அந்தச் சம்பந்தத்திற்கு உடன்பட்டேன்; ஆண்டவன் கிருபையால் உனக்குப் போதிய பொருள்பண்டம் நிலம்புலம் உண்டு; இன்னும் ஆகவேண்டியவைகளை நான் பார்த்துக் கொள்ளுவேன்: நீ நல்லா யிருப்பாயடியம்மா; உனக்கும் இந்தச் சம்பந்தஞ் சம்மதந்தானா" என்று சொல்லி வினாவினர். "சிற்றப்பா, உங்களுக்குச் சம்மதமானால் எனக்குஞ் சம்மதந்தானே" என்று நான் பதில் சொன்னேன். என் சிறிய தந்தையாரும் நான் சொன்ன பதிலைக் கேட்டுச் சந்தோஷப்பட்டார்.

### கொல்லவல்லக் கொல்லவல்ல பொல்லாக் குணம்போக்க

இங்ஙனஞ் சிலவாரஞ் செல்ல, என் சிறியதந்தையார், என்பொருட்டுச் சில ஆபரணங்களைச் செய்வித்தார்; எனக்குந் தங்கைச்சிக்கும் சில விலையுயர்ந்த பட்டாடைகளை வாங்கிக்கொண்டு வந்தார்; இவைகளையெல்லாம் என் சிறியதாயாருக்கு அவர் காட்டியபோது, சிறியதாயார் கண்டு மகிழ்வதற்கு மாறாக முகவாட்டத்தோடு கூடியவராய்க் காணப்பட்டமையினால், என் சிறிய தந்தையார் சில பட்டாடைகளைச் சிறிய தாயாருக்கும் வாங்கிக் கொண்டுவந்து "எங்கள் பெரியதங்கைச்சியின் கல்யாணகாலஞ் சமீபிப்[illegible]ல் அக்காலத்தில் உபயோகிக்க [illegible]க்கென்று வாங்கி வந்தேன்" [illegible]ன்று சொல்லிக் கொடுத்தார்; கொடுத்தவற்றை இரு கரத்தினாலும் சிறியதாயார் ஏற்றுக் கொண்டாரெனினும், அவர் முகத்தில் அந்த நேரந்தானும் மலர்ச்சி யுண்டாகவில்லை; அதனைச் சிறியதந்தையாரும் தங்கைச்சியும் நானும் அவதானித்தோம்; இதற்கிடையில் என் தங்கை சிறுபெண்ணல்லவா; தாயாரைப் பார்த்து "என்ன எங்கள் அம்மாவிற்கு முகத்திலே சந்தோஷத்தைக் காணவில்லையே" யென்று புன்னகையரும்பச் சொன்னாள்; அந்தநேரம் சிற்றப்பர் அந்த இடத்தி லில்லை; மகள் அப்படிச் சொல்லியதைக் கேட்டவுடனே தாய் மகளைச் சினந்து பார்த்து 'நீயும் வரவரக் கெட்டுப்போகிறாய்; உன்மேற் பிழையில்லை, நீ கூடிய கூட்டத்தால் வந்த வினை" என்று கடிந்து சொல்ல, என் தங்கை வெதும்பியவளாய் "அம்மா, நான் ஆரோடு கூடினேன்? ஆர்புத்தி கேட்டேன்? ஏன் இப்படிச் சொல்லுகிறீர்கள் இப்பொழுது வந்த வினையென்ன" என்று கண்களில் நீர் ததும்பச் சொன்னாள்; என் சிறியதாயார் உடனே அவ்விடம் விட்டகன்றார்; நான் என் தங்கையைக் கவலைப்படாது தடுத்து 'தங்கைச்சி, அம்மா சொன்னதையிட்டுக் கவலைப்படலாமா? எங்கள் பெற்றோர் ஏதும் புத்திசொல்வதும் இடையிடையே கடிந்து பேசுவதும் எங்கள் நன்மையை உத்தேசித்துத் தானே; நல்ல குருநாதர் நம்மை வருத்துவதுங் கொல்லவல்ல பொல்லாக் குணம்போக்க என்று உலகத்திலே சொல்ல, நீர் கேட்டிருக்கவில்லையா தங்காய்; பரிபவமென்பது பிறராற் பட்டாலன்றோ என்று பாரதத்திற் சொல்லப்பட்டிருக்கிறதே; பிறர் நம்மை ஏதுங் குறைசொன்னால் அதற்குப் பயப்படத்தான் வேண்டும்; மனம் வருந்தத்தான் வேண்டும் என்று பலவாறு சமாதானஞ் சொன்னேன்.

### "....உள்ளாறு நாவினாற் சுட்டவடு"

அப்பொழுது என் தங்கைஎன்னைக் கவலையுடன்பார்த்து, "அக்கா, என் தாயார்என்னைக் கண்டித்துப்பேசியதையிட்டுநான் கவலைப்படவில்லை; பிழை கண்டாற் பெற்றார்கண்டிக்கவேண்டியதுதான், திருத்தவேண்டியதுதான், பிள்ளைகளாகிய நாங்கள் அவர்கள் செய்வது நன்மைக்கென்று உணர்ந்து திருந்தி நடக்கவேண்டியது நியாயந்தான் ஆனால் என்தாயார்என்னைக் குறைசொல்லும்போது "நீயும் கெட்டுப்போகிறாய், உன்மேற் பிழையில்லை, நீ கூடிய கூட்டத்தால் வந்த வினை" என்று சொன்னாரே அந்த வார்த்தைகள் என் னுள்ளத்தைப் புண்படுத்துகின்றன; அக்கா, "தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்டவடு" என்ற வள்ளுவர் வாக்கு நீங்கள் அறியாததல்ல; என் தாயார் சொன்ன நீயும் என்றதிலே உள்ள உம்மை யாரைக் குறித்தது? கூடாத கூட்டத்தால் வந்த வினை யென்று சொன்னாரே என் தாயார்; உங்களைவிட நான் வேறு யாருடன் கூடி ஊடாடிவருகிறேன்; உங்களுடைய அன்பு அருமை பெருமைகளை என் அப்பர் அறிவார், சிறுமியானாலும் நான் நல்லாய் அறிவேன்; ஆனால் என்னைப் பெற்றவள் இன்னமும் விளங்கிக்கொள்ள வில்லையே என்பதுதான், என் அருமை அக்கா! எனக்குத் தீராக் கவலையை ஆக்கிவிட்டது" என்று சொல்லி என் அருமைச் சகோதரி விம்மி விம்மி யழுதாள்; அந்த நேரத்தில் என் சிறியதாயார் என்னைக் குறைகூறியதையிட்டு எனக்கு அதிக கவலையில்லை; ஆனால் என்னையிட்டு என் தங்கை மனம் வருந்துகின்றாளே யென்பதுதான் என் கவலையை அதிகப்படுத்தியது: நான் என் தங்கையைப் பார்த்து "என் அருமைத் தங்காய், நீர் அழவேண்டாம், வருந்த வேண்டாம்; உங்கள் அம்மாதானே எனக்கும் இப்பொழுது தாய்; அம்மா சொன்னதையிட்டு நான் கவ

தொடர்ச்சி 5 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "என்று தணியும் சுதந்திர தாகம்!"

## இந்திய தேசிய ராணுவம் வளர்ந்த விதம் கிழக்காசிய மக்களின் சுதந்திர வேட்கை

### சிங்கப்பூரில் ஸ்தாபிதமான விபரம்

(முற்றொடர்)

**அக்கிரமமே காரணம்**

இந்திய தேசிய இயக்கம் அந்நியரால் ஊக்குவிக்கப்படவில்லை. இந்திய மக்களிடையே யதேச்சையாகத் தோன்றியது. சுயராச்சியம் எமது பிறப்புரிமை, அதை நாம் அடைந்தே தீருவோம் என்ற ஓர் உணர்ச்சியால் உந்தப்பட்டு உண்டானது என்றும் இன்னோரன்னவற்றை இதுகாறும் விபரித்தோம். பிரிட்டிஷார் ஆற்றிய பட்சபாதகச் செயல்களால், அவர்கள் இயற்றிய கொடுஞ்செயல்களால் சுதந்திர உணர்ச்சி மக்களிடையே கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது. ஜப்பானியரால் ஆக்கபபட்ட ஓர் ஸ்தாபனம் என இந்திய தேசிய இராணுவத்தை ஆங்கிலர் நையாண்டி செய்தனர். அது முற்றிலும் தவறான எண்ணம். இந்திய மக்கள் புரட்சிக்குத் தயாராக இருந்தனர். புரட்சியைச் செய்து தம் லட்சியத்தை அவர்கள் அடைவதற்கு கீழ்நாட்டில் மூண்ட யுத்தம் அநுசரணையாக விருந்தது. இப்படியான புரட்சிக்கு பிரிட்டிஷார் இந்தியரையோ, ஜப்பானியரையோ, வேறெச்சாதியாரையோ குறைகூற வேண்டியதில்லை. அவர்கள் செய்த அக்கிரமங்களே இப்புரட்சிக்குக் காரணமாயினபடியால், அவர்கள் தங்களைத் தாமே குறைகூறவேண்டும்.

**இயக்கத் தலைவர்கள்**

யுத்தம் மூண்ட அந்தக்காலத்தில், ருஷ்பிகாரிபோஸ் என்ற வங்கநாட்டு வீரன் ஜப்பானில் இருந்தார். பன்னெடுங்காலத்துக்குமுன் இராஜப்பிரதிநிதியாகவிருந்த ஹார்டிஞ் பிரபு பிரயாணஞ் செய்த புகைரத வண்டிக்கு வெடிகுண்டு வைத்து அவரைக் கொலைசெய்யச் சதியாலோசனை செய்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்டவர். தேசாபிமான சிந்தையால் உந்தப்பெற்ற ஓர் பெரும் அபிமானி. அவர் தன் தாய்நாட்டைத் துறந்துஜப்பானிடம் சரண்புகுந்து அங்கேயிருந்துகொண்டு இந்திய சுதந்திரத்துக்காக அரும் பாடுபட்டவர். அப்படிப்பட்ட அவர், யுத்தந் தொடங்கியதும், ஜப்பான் ஆக்கிரமித்த நாடுகளில் இருந்த இந்தியரை ஒன்று சேர்ந்தனர். அவர் சேவை ஒருபுறமாக, பாஞ்சாலப் பட்டாளத்தைச் சேர்ந்த ஸ்ரீஜூத்மோஹன்சிங் என்னும் போர்வீரன் இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கு, இந்தியச் சிப்பாய்களை ஒன்று சேர்த்தார். இந்திய சுதந்திர போராட்டத்தில் ஜப்பான் தன்னாலான உதவியையும் ஒத்துழைப்பையும் அளிக்கத் தயார் என்று ஜப்பானிய அரசாங்கத்தின் சார்பாக, ஜப்பானியச் சேனாதிபதி இவாக்குரு என்பார் உத்தரவாதம் அளித்தார். இந்த நிலைமையில், பாரதநாட்டின் அடிமைத் தளையை எவ்வாறு நீக்கலாம் என்பதைப்பற்றி ஆலோசிப்பதற்காக, கிழக்கு ஆசியாவிலுள்ள இந்திய மக்கள் மகாநாடு ஒன்று 1942-ம் ஆண்டு மார்ச் மீ ஜப்பானின் தலைநகரான டோக்கியோவிற் கூடியது. அந்த மகாநாட்டுக்கு, ஆகாய விமானத்தில் வந்த மலாய்நாட்டுப் பிரதிநிதி நீலகண்ட ஐயர், சீயத்துப் பிரதிநிதி சுவாமி சத்தியானந்தா, பிரதமசிங், அக்ரம் கான் என்னும் வீரசிகாமணிகள் விமானம் கீழ்வீழ்ந்து நொருங்கியதால் உடன் மரணமடைந்தனர். இச்செய்தி கிழக்காசியாவில் வதிந்த இந்திய மக்கள் அனைவர்க்கும் தீராக் கவலையைக் கொடுத்தது. அவர்களின் ஞாபகத்துக்காக கிழக்காசியா வெங்கணும் அநுதாபக் கூட்டங்கள் நிகழ்ந்தன. அங்கே பூரண சுதந்திரப் பிரதிக்கனை மக்களாற் செய்யப்பட்டது டொக்கியோவில் நிகழ்ந்த மகாநாடு, இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் பெற்றே தீருவது என்றும், சீயத்தைச் சேர்ந்த பாங்காக் நகரில் கூடிய சீக்கிரம், இதிலும் பார்க்க இன்னோர் பெரிய மகாநாடு கூட்டுவதென்றும் தீர்மானித்தது.

**பாங்கொக் மகாநாடு**

சிலநாட்களின்பின் பாங்காக் நகரில், இந்திய மக்களின் மகாநாடு முன்னெருபோது மில்லாதவாறு கூடியது வடக்கே பர்மாவிலிருந்து கிழக்கே டோக்கியோவரை, தெற்கே ஜாவா சுமாத்ரா தொடக்கம் வடக்கே மஞ்சூரியாவரை இருந்த இந்திய மக்கள் இம்மகாநாட்டிற் பிரசன்னமாயிருந்தனர். மகாநாடு இரகசியமாக நடைபெற்றது. ஜப்பானியர்தானும் மகாநாட்டு நடவடிக்கைகளைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. கிழக்கு ஆசியாவில் உள்ள இந்திய மக்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து, ஓர் சுதந்திர சேனையை ஸ்தாபித்து, பாரதநாட்டின் அடிமை விலங்குகளை அறுத்தெறிவது என மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. ஸ்ரீஜூத் ருஷ்பிகாரிபோஸ் தலைமையில் இந்திய சுதந்திர சங்கம் நிறுவப்பட்டது. இச்சங்கத்தின் தீர்மானங்களை அமுல் நடத்த ஓர் நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. ருஷ்பிகாரிபோஸ் தலைவராகவும், மலாய்நாட்டிலிருந்து ருகவன், K. P.கேசவமேனன் என்பவர்களுடன், சேனாவீரர் பிரதிநிதிகளாக மோஹன்சிங், கிலானி என்பவர்களும் இந்நிருவாகசபையில் அங்கத்துவம் வகித்தனர். இந்நிருவாக சபை உடனே தனது லட்சியத்தை நிறைவேற்றுவதில் தீவிரமாக ஈடுபட்டது. இந்தியாவின்மீது படையெடுத்து ஆங்கிலரை விரட்டித் துரத்திப் பாரதநாட்டுக்குச் சுயராச்சியம் பெற்றுக் கொடுப்பதற்கான ஓர் சேனையை அமைக்க ஸ்ரீ ஜூத்மோஹன்சிங்கிற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

**ஜப்பானிய பிரதமரின் உத்தரவாதம்**

இந்த மகாநாட்டுக்கு ஜப்பானிய பிரதம மந்திரியான ரோஜோ ஓர் ஆசிச் செய்தி அனுப்பியிருந்தார். "இந்த மகாநாடு மங்களகரமாகத் தனதுகருமத்தை ஆற்றவேண்டிநான் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன். பாரதநாடு சுயராஜ்யம் பெற்றுத் தனது தொன்மைய உன்னத[illegible]யடைவதற்கு ஜப்பானியர் த[illegible]லான உதவிகளையும் ஒத்துழைப்[illegible]யும் அளிப்பதற்கு எந்நேரமும் சித்தமாக இருக்கின்றனர். இந்தியாவுக்கும் ஜப்பானுக்கு மிடையேயுள்ள தொடர்பைப்பற்றிச் சொல்லுகில் இந்தியாமீது ஜப்பானுக்கு எவ்வித மான ஆசையும் கிடையாது என்பதைப்பட்டவர்த்தனமாகத் தெரிவிக்க

தொடர்ச்சி 4ம் பக்கம்

# முன்னேறுகிறது

## உணவுப்பொருள் விளைவு அபிவிருத்தி

### மாகாண உதவித் தலைவரின் அறிக்கை

உணவு அபிவிருத்திச் சபையின் கூட்டம் ஒன்று சென்றவாரம் யாழ்ப்பாணம் கச்சேரியில் வடமாகாணத் தலைவர் தலைமையிற் கூடியது. தம் பரிபாலனத்தின்கீழ் உள்ள பகுதிகளின் உணவு அபிவிருத்தி விஷயமாக, உதவித் தலைவர் ஸ்ரீ ஸ்ரீகாந்த அவர்கள் ஓர் அறிக்கையை வாசித்தார். அவ்வறிக்கையின் சாரம் வருமாறு:—

எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து உணவுப்பொருள் விளைவு அபிவிருத்தியடைந்து வந்திருக்கிறது என்றே கூறவேண்டும். விவசாயிகள் இவ்விஷயத்தில் ஊக்கமெடுத்து எம்முடன் ஒத்துழைத்திருக்கிறார்கள். இனியும் அவர்கள் தொடர்ந்து அளிக்கும் ஒத்துழைப்பாலும், செய்யும் முயற்சியாலும் எங்களுடைய உணவுப் பொருள் விளைவு அபிவிருத்தி அதிகமாக முன்னேறும் என்பதே எமது நம்பிக்கை.

பழைய தூர்ந்துபோன கிணறுகளைப் புதுப்பிக்கவும், புதுக் கிணறுகள் தோண்டுவிக்கவும் 40000ரூபா மான்யம் கிடைத்திருக்கிறது, இவ்விஷயமாக மனுச் செய்வோர்களின் மனுக்களை அரசிறை அதிகாரிகள் பரிசீலனை செய்து அறிக்கை செய்கின்றனர். ஓர் ஏக்கர்நிலம் உள்ளவர்களுக்கும் இந்த உதவி செய்யவேண்டும் என நிலப் பகுதி அதிகாரிக்கு நான் சிபாரிசு செய்திருக்கிறேன். அதற்கு அவருடையமறுமொழி இன்னும் கிடைக்கவில்லை.

புத்தூரில் நிலாவரை நீர்நிலையில் இருந்து நீர்ப்பாய்ச்சுதற்கான பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. இப்போது இறைக்கப்படும் தண்ணீர் வீண்போகாமல், பயன் அளிக்கத் தக்கதாக, அதனைக் கொஞ்சக்காலத்தாற் பயனை அளிக்கும் பயிர்களுக்கு இறைக்க ஏற்கெனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த நிலாவரைத் திட்டத்தால் 700 ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாய்ச்ச ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

# வெட்கம்!

## இந்தியா எங்கள் தாய்நாடு

### சிங்களத் தலைவரின் கூற்று

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள பிரபல பௌத்த குருவான ஸ்ரீ ராகுல, இலங்கைஇந்தியா தொடர்பு பற்றி ஓர் பத்திரிகை நிருபர்க்குப் பின்வருமாறு கூறினர்.

"வருங்காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையே மிக நெருங்கிய தொடர்பு ஏற்பட வேண்டும். அதனால் இலங்கைக்கே மிகுந்த அநுகூலங்கள் ஏற்படும். பண்டிதர் ஜவஹர்லால் நேரு குறிக்கோளாகக் கொண்டுள்ளபடி தென்கிழக்கு ஆசிய நாடுகள் யாவும் ஓர் சமஷ்டியிற் சேர வேண்டும். அந்தச் சமஷ்டி பூர்த்தியாக, இந்த இலங்கையும் இந்தியாவுடன் சேரவேண்டும். ஆனால் இவ்விஷயத்தில் எனது சிங்களச் சகோதரர் சிலர் ஆற்றி வரும்செயல்கள் மிகவும் துக்ககரமானவை. தாங்கள் எந்த் தாய்நாட்டில் இருந்து தங்கள் கலைஞானத்தை, தங்கள் நாகரீகத்தை—ஏன் தங்கள் பாஷையைத்தானும் - பெற்றார்களோ அந்தத் தாய்நாட்டை உதாசீனப்படுத்த இந்தச் சிங்களச் சகோதரர் முயற்சிக்கிறார்கள். இது மிகவும் வெட்கமான காரியம். இது ஓர் நன்றி கெட்ட செயலாகும்."

# யானைபோல நின்றவர் பூனைபோலப் பதுங்கினர்

## தமிழர்க்குத் துரோகம்செய்த பதவிவேட்டுவர் அவர்களை இனியும் அனுப்புதல் முடியாது

### தமிழர் மகாநாட்டின் எதிர்காலக் கருமம்

(நமது நிருபர்)

அகில இலங்கைத் தமிழர்மகாநாட்டின் ஆதரவில் அல்வாயில் நிகழ்ந்த மாபெருங் கூட்ட விபரம் ஏற்கனவே இப்பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. அக்கூட்டத்தின் பின்னர், ஸ்ரீமான் ஜி. ஜீ. பொன்னம்பலமும், தமிழர் மகாநாட்டைச் சேர்ந்துள்ள பிரமுகர்களும், மானிப்பாய், சுளிபுரம், வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, காங்கேசன்துறை, தெல்லிப்பழை, அளவெட்டி, ஏழாலை, உடுவில் முதலாம் இடங்களில் உள்ள பல பிரமுகர்களுடன் சம்பாஷணைகளும் மகாநாடுகளும் நடத்தித் தமிழர்மகாநாட்டின் நிலைமையை விளக்கினர்.

இந்த மகாநாடுகளிலும், சம்பாஷணைகளிலும் திரளான ஜனங்கள் குழுமியிருந்தனர். வடமாகாணம், கீழ்மாகாணம் இரண்டிலும் இருந்து அனுப்பப்படும் பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள் ஒரே கொடியின்கீழ் நின்று ஒற்றுமைபூண்டு பொதுவாகத் தேசத்தின் நன்மையையும் விசேஷமாகத் தமிழ்மக்கள் நன்மையையும் பாதுகாத்தல்வேண்டும்; அப்படிப்பட்டவர்கள் முன்னேற்ற மனப்பான்மையுடைய சிங்களப்பிரதிநிதிகளுடனும் ஒத்துழைத்து இலங்கைக்குப் பூரண சுயராஜ்யம் பெறுவதை லட்சியமாகக் கொண்டு உழைத்தல் வேண்டும் என்று குறித்த மகாநாடுகளில் அபிப்பிராயம் கூறப்பட்டது.

ஸ்ரீ ஜீ. ஜீ. பொன்னம்பலம் நின்ற நிலைமை முற்றும் சரி என ஷெ மகாநாடுகளில் சமுகமளித்தவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். "இனியும் ஐம்பதுக்கைம்பது" என்றகொள்கையைத் தமிழர் மகாநாடு கைக்கொள்ளுமோ' என்று ஒருவர் கேட்ட போது ஸ்ரீ பொன்னம்பலம் பின்வருமாறு பதிலிறுத்தார்:

"ஐம்பதுக்கைம்பது பிரதிநிதித்துவம் பெறுவதுமத்திரம் எமது லட்சியமாக இருக்கவில்லை. எமது பல லட்சியங்களில் அதுவுமொன்றாகவிருந்தது. இலங்கைக்கு ஓர் அரசியற் திட்டம் வகுப்பதற்கு சோல்பெரிக் குழுவினர் வந்த அக்காலத்தில் எமது உரிமைகளைப் பெறவும், பாதுகாக்கவும் ஐம்பதுக் கைம்பது என்பதை நாம் வற்புறுத்தினேம். எமது கோரிக்கை நியாயமானது: அது பிழை என்பதை இற்றைவரை எவரும் கூறத்துணியவில்லை அந்தக் கொள்கை பிழை என்று சோல்பெரிக் குழுவினர்தானும் கூற முடியவில்லை. ஆனல், எங்களின் நியாயமான கோரிக்கைகளைப் புறக்கணித்தபடியால் சிறுபான்மையினர்க்கு சோல்பெரிக் கூட்டத்தார் ஓர் பெரும் அநீதியை விளைத்துவிட்டனர் சிறுபான்மையினர் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்பதற்காகக் குடியேற்றநாட்டு

தொடர்ச்சி 4ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றுதணியும் சுதந்திர தாகம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

விரும்புகிறேன்" என்னும் கருத்துப்பட ரோஜோவின் செய்தி இருந்தது. மகாநாடு மங்களகரமாக முடிந்தது. பிரதிநிதிகள் தத்தம் ஊர்களுக்கு மீண்டனர் இந்திய சுதந்தர சங்கத்தின் கொடியின்கீழ் கிழக்காசியாவில் உள்ள இந்திய மக்களை ஒன்று சேர்க்கும் வேலையில் ஈடுபடத்தொடங்கினர்.

**இயக்க வளர்ச்சி**

இந்திய சுதந்திர சங்கம் நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியுமாக வளர்ந்துவந்தது. சிங்கப்பூரில் அதன் தலைமைக் காரியாலயம் ஸ்தாபிக்கப்பட்டது, மலேயா, பர்மா, தாய்லந்து, ஜாவா, சுமத்ரா, இந்தோ சீனம், ஹாங்காங், ஜப்பான் என்னும் நாடுகளில் கிளைச் சங்கங்கள் ஸ்தாபிதமாகி மிகவும் சுறுசுறுப்பாக வேலைசெய்யத் தொடங்கின. கிழக்கு ஆசியாவின் மூலைமுடுக்கு எங்கணும் வாழ்ந்த இந்திய மக்கள் கண்விழித்தெழுந்தனர். சுதந்திர வேட்கை கொண்டனர்; "என்றுதணியுமிந்த சுதந்திர தாகம்!" என்று அங்கத்தவராய்ச் சேர்ந்து உழைக்க ஆங்காங்கே நிறுவப்பட்டுள்ள இந்திய சுதந்திர சங்கங்களை நாடிச் சென்றனர். அங்கத்தவரின் சந்தாப் பணம் ஒரு வெள்ளி. கிழக்கு ஆசியாவில் இருந்த இந்தியரனைவரும் சுதந்திர சங்கத்திற் சேர்ந்துகொண்டனர். அச்சங்கம் அவர்களின் கற்பக தருவாய் விளங்கியது. அவர்களுக்கிடையேயுள்ள வியாச்சியங்களை அது சமரசமாக, எவர்க்கும் திருப்தியாகத் தீர்த்துவைத்தது. இந்தியர்க்கு உணவு விநியோகம், அவர்களுக்கு உதவிபுரிதல் முதலாம் சகல வேலைகளையும் இந்திய சுதந்திர சங்கம் செய்துவந்தது. யுத்தக் கொடுமைகளால் வீடுவாசல் இழந்தோர்க்கு உதவிபுரிதல், ஊண் உடையற்றோர்க்கு அவற்றை உதவுதல் என்னும் இன்னோரன்ன தொண்டுகள் புரிவதும், இந்தச் சங்கத்தின் கடமைகளாயிற்று. ஆரம்பத்தில் இவ்வேலைகள்யாவும் சம்பளம்பெருத கௌரவ ஊழியர்களாலேயே செய்யப்பட்டன. ஆனால் காலம் செல்லச் செல்ல, பொருள்களின் விலை அதிகரிக்கச் ஜீவியச் செலவு அபரிமிதமாகிவிட்டது எனவே, இத்தகைய கைங்கரியங்களில் ஈடுபட்டுள்ளதொண்டர்க்கு ஓர் தொகை உபகாரப் பணம் மாதந்தோறும் கொடுக்கப்பட்டு வந்தது. இத்துடன் யுத்தகளத்தில் வேவு பார்த்தல், பகைவர்க்கிடையே புகுந்து அவர்களுக் கெதிரான கருமங்களைச் செய்தல் முதலியவற்றில் இந்தியர்க்குப் பயிற்சி அளிப்பதற்கு "ஸ்வராஜ்ப நிலையம்" என ஓர் பயிற்சிச்சாலை 1942-ம் ஆண்டு ஜூலை மாதம் பினாங்கில் ஸ்தாபிக்கப்பட்டது, அதில் அனேக இந்திய இளைஞர் பயிற்சி அளிக்கப்பட்டனர்.

**இந்திய தேசீய இராணுவம்**

பிரிட்டிஷ் இராணுவம் ஜப்பானியரிடம் சரணாகதியடைந்தபோது, ஜப்பானியரால் சிறைப்படுத்தப்பட்ட இந்திய வீரரைக் கொண்டே ஆரம்பத்திலிருந்த இந்திய தேசீய இராணுவம்; அப்படிச் சிறைப்படுத்தப்பட்ட இந்திய வீரரை, இந்திய தேசியராணுவத்திற் சேரவேண்டும் என எவராவது பலவந்தப்படுத்தவில்லை. விருப்பமானவர்கள்மாத்திரம் இந்தியதேசியராணுவத்திற் சேரலாம் என்ற நியதியிருந்தது. மலேயாவில் சரணடைந்த போது பிரிட்டிஷ் சேனாதிபதியான ஹன்ற் என்பவர் தனக்குக்கீழ் இருந்த இந்தியப் படைகளை அப்படியே ஜப்பானிய தளகர்த்தரான இவாக்குருவிடம் ஒப்படைத்தார். இவாக்குரு அந்த இந்தியரை மோஹன்சிங்கிடம் விட்டார். அப்போதுதானும் சுதந்திர இயக்கத்திற் சேரும்படி மோஹன்சிங் எவரையாவது பலவந்தப்படுத்தவில்லை. ஆரம்பத்தில் 15000 பேரே இந்திய தேசிய ராணுவத்தில் இருந்தனர். காந்திப் பட்டாளம், நேரு பட்டாளம், அசாத் பட்டாளம் என்று மூன்றுபட்டாளங்களும், ஹிந்துஸ்தான் யுத்தப்படை என்ற ஓர் காலாட்படையும், ஆயுத மேந்திய வாகனப்படை ஒன்றும், இப்படிப் பகுதி பகுதிகளாக ஆரம்பத்தில் வகுக்கப்பட்டன. ஸ்ரீ ஜெ.த் மோஹன்சிங்கே இச்சேனைமுழுவதுக்கும் அதிபதியாயும், ஸ்ரீ M. J. கியானி அவர்க்கு உதவியாளராயும் நியமிக்கப்பட்டனர். பட்டாளத்தினர்க்குச் சுறுசுறுப்பாகப் பயிற்சி அளிக்கப்பட்டது ஒழுங்காக ... னம் செலுத்தப்பட்டது. (வரும்)

## யானைபோல நின்றவர் பூனைபோலப் பதுங்கினர்

3-ம் பக்கத் தொடர்ச்சி

மந்திரி சோல்பெரி அறிக்கையை வெளியிட்டார். நடந்தது என்ன? எங்களுடன் இருந்து, யானைபோல நின்ற பலசாலிகள் யாவரும் பூனைபோலப் பதுங்கிக் குட்டிக்கரணம் போட்டார்கள் எனவே முடியேற்ற நாட்டு மந்திரியாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. நாங்கள் நல்ல பாடம் படித்துவிட்டோம். இனியாவது உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று செய்யும் கபட நாடகக்காரரைப் பாராளு மன்றத்துக்கு எம் பிரதிநிதிகளாக அனுப்பாமல், இலங்கை முழுவதுக்கும் பொதுவாயும், தமிழ் மக்களுக்கு விசேஷமாயும் சேவைசெய்யக் கூடியவர்களையே தெரிந்தனுப்புவோமாக".

யாழ்ப்பாணம் நகரசங்கப் பகுதியிலும் உள்ள பிரமுகர்கள் ஸ்ரீ பொன்னம்பலத்தைக் கண்டு, வருங்கால நடவடிக்கைகளைப்பற்றிச் சம்பாஷித்தனர்.

## கொழும்பு விவேகானந்த சபை

கொழும்பு விவேகானந்த சபையின் நாற்பத்து மூன்றும் வருடாந்தக் கூட்டம் வைகாசிமாசம் 30ந் திகதி (12-6-46) புதன்கிழமையன்று மேட்டுத்தெருவிலுள்ள சபை மண்டபத்தில் நிகழ்ந்தது அத்தருணம் சபைத்தலைவராகும் அத்துவக்காத் திரு. ந. நடராசா அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தனர். சபையின் வருடாந்த அறிக்கையும் கணக்கு விபரங்களும் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அடுத்த வருடத்திற்கு உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவரவர்கள் தமது குறிப்புரையில் சபையார் ஆலோசித்துவரும் புதிய கட்டிடத்தைப்பற்றிக் குறிப்பிட்டு அது சம்பந்தமாக வேண்டிய பணத்தைத் திரட்டுவதற்கும் சபைக்கு மேலும் அங்கத்தினரைச் சேர்ப்பதற்கும் விரைவில் ஓர் வேண்டுகோள் வெளியிடப்படுமெனக் கூறினர்.


## பகிரங்க அறிவித்தல்

ஐயன்மீர்!

எனது ஆட்சியும் சோந்தமுமான நீர்வேலி இறை வடுவாவுடை நெ. ப. 15 ஐ (கிழக்கு கதிர்காமர் கார்த்திசேசுவுக்கும், தெற்கு விதைபா நிலமும், மேற்கு கதிர்காமர்கந்தையாவுக்கும், வடக்குசீனியர்கந்தையாவுக்கும் அம்மன் கோவிற்குமுரிய ஆதனங்களை எல்லையாகவுடைய ஆதனத்தைச்) சிலர் கள்ளச் சாதனம் செய்து வைத்திருப்பதாக அறிகிறேன். ஆதலின் இவ்வாதனத்தைப்பற்றிய சகல உரிமைகளும் எனக்கே உண்டென்பதைக் கற்பித்துக்கோள்கிறேன்.

இங்ஙனம்
P. சின்னையா - நடராசா
நீர்வேலி தெற்கு. 20—5—46

Mis 51 - 24-5—23-6-46




இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:

எங்கும் கியாதிபெற்ற எமது

ரேடியோ பீடிகளையே

எப்பொழுதும் உபயோகித்து ஆனந்தம் அடையுங்கள்.

எல்லாஊர்களிலும் கிடைக்கும்

மொடேண் ஏஜென்சீஸ்,
சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)

## பசந்த லேகியம்

இதனால் சூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிப்பால் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
நி. 156, செக்கடித்தெரு கொழும்பு
Mis.25 23.4-46 to 22.3.47)

## தந்தரோகசஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

## சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ யிலும் அனுப்புவோம்.
சீசா மூலிய செலவு வேறு:

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 27 26-4-46—25-10-46

## காணிக்குத்தகை ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை மேற்பார்வையில் உள்ள ஸ்ரீமதி புண்ணியநாச்சி மடதருமத்தைச் சேர்ந்த தென்மராட்சிப்பகுதி மறவன்புலவு நாவற்குழி கோயிலாக்கண்டி இறைகளில் இருக்கும் நெல்வயல் பனை அடைப்பு ஆதியவற்றின் குத்தகை அவ்வக் காணிகளிலிருந்து 1946-ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் சபையின் உத்தியோகத்தர்களால் ஏலத்தில் விற்கப்படும், குத்தகை வாங்க விரும்புவோர் முறபணங் கட்டல் வேண்டும், குத்தகை மூன்று வருடத்துக்கு மேற்படாத காலத்துக்கு எழுதப்படும் எல்லாக் காணிகளையும் ஒருமித்தும் அல்லது பாகங்களாகவும் குத்தகைக்குக் கொடுக்கப்படும். காணிகளின் பெயர்களையும் பரப்பையும் வேறு விபரங்களையும் அறிய விரும்புவோர் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைத் தலைவர், வழக்கறிஞர் திரு. இ. சிவகுருநாதர் அவர்களிடம் அறிந்து கொள்ளலாம்.

இ. சிவகுருநாதர்
தலைவர்

யாழ்ப்பாணம், 10—6—46.

Mis 82 11-6 46—21-6-46

## குடைமுத்திரை (மார்க்) ஓடுகள்

நீங்கள் நவமாகக் கட்டியெழுப்பும் சட்டிடங்களுக்கு இன்றியமையாத

## கலிக்கற் ஓடுகள்

இவைகளின் கனம் மிகவும் குறைக்கப்பட்டு, வயிரம் மிகவும் கூட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவைகளினல் வேயப்படும் கூரைகளுக்குப் பாரம் மிகக் குறைவாயிருக்கும். இவைகளின் கனத்துடன், இவைகளால்வேயப்பட்டிருக்கும் பரப்பை ஒத்துப்பார்த்தால் விசாலம் மிகவும் அதிகமாய்க் காணப்படும்.

காற்றினல் உடையாது. மழையினல் நீர் பொசியாது. மிகவும் கரிசனையாகவும், நுணுநுணுக்கமாகவும் செய்த ஆராய்ச்சியின் பயனுவே இவைகள் தயாரிக்கப்பட்டன.

ஓடுகள் வேண்டுமாயின் எவ்வளவு தேவையென்று எலவே 'ஏசண்டுகளுடன்' தாமதியாது பதிவுசெய்து வைப்பது நன்று. வருகிறவாரம் ஒருகப்பல் ஓடுகள் இறக்குமதி செய்வோம்,

'சோல் ஏஜென்ஸ்'

ஜே. சேரூபிம் அன் பிறதர்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Mis 243 B 12-3—12-9 (வெ)

## நவீன வேலைப்பாடுள்ள

பவுண் நகைகள், வெள்ளி நகைகள், வைர நகைகள், கல்நகைகளுக்கு

நம்பிக்கைக்கும் நாணயத்துக்கும் சிறந்த இடம்

## கந்தையா பெரியதம்பி

நகை வியாபாரி, 509 காங்கேசந்துறை ரோட்
தட்டாதெரு யாழ்ப்பாணம்

Mis 196 7-1 — 7-7 (வெ,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல்

**இராஜப்பிரதிநிதி தீர்ப்பு**

இடைக்கால அரசாங்கத்தில் 12 பேர் இருக்கவேண்டும். அதில் 5 பேர் காங்கிரஸ் அல்லது ஹிந்துக்களாகவும், 5 பேர் முஸ்லிம் லீக்கைச் சேர்ந்தவர்களாயும் இருக்கவேண்டும் என்று முஸ்லிம்லீக் ஆலோசனை கூறியது. சமபலப் பிரதிநிதித்துவத்தைக் காங்கிரஸ் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. ஆகவே இடைக்கால அரசாங்கத்தில் 15 பேரை நியமித்து அந்த 15 ஸ்தானங்களில் 5 ஸ்தானங்களை முஸ்லிம்லீகிற்கும் மீதி 10 ஸ்தானங்களைக் காங்கிரஸ் சிபார்சு செய்யும் பிரமுகர்களுக்கும் வழங்கவேண்டுமெனக் காங்கிரஸ் ஆலோசனை கூறியது. இந்த இரண்டு விதமான ஆலோசனைகளுக்கும் இடையில் இராஜப் பிரதிநிதியும் மந்திரிகளும் தம் மத்தியஸ்தத் தீர்ப்பை இப்போது வெளியிட்டிருக்கின்றனர். இடைக்கால அரசாங்கத்தில் 14 பேர் இருப்பர். அவர்களில் 5 பேர் முஸ்லிம்லீக்கைச் சேர்ந்தவர்களாயிருப்பர். மீதி ஒன்பது பேரில் 5 பேர் காங்கிரசைச் சேர்ந்த ஜாதி ஹிந்துக்கள், ஒருவர் காங்கிரசைச் சேர்ந்த தீண்டாவகுப்பினர்; ஒருவர் கிறிஸ்துவர்; ஒருவர் பார்ஸிக்காரர்; மற்றொருவர் சீக்கியர் என்றின்னவாறு இராஜப்பிரதிநிதி தீர்மானித்துப் பின்வரும் 14 பேரையும் இடைக்கால அரசாங்கத்திற் சேரும்படி அழைப்பு விடுத்திருக்கிறார். பண்டிதர் ஜவஹர்லால்நேரு, சர்தார் வல்லபாய்பட்டேல், பாபுராஜேந்திரப்பிரசாத், ஸ்ரீஜ-த் இராஜகோபாலாச்சாரியார், ஸ்ரீ ஹரிகிருஷ்ணமேதாப், (காங்கிரஸ்) ஸ்ரீ ஜெகஜீவன்ரும் (காங்கிரஸ் தாழ்த்தப்பட்டவர்), டக்ரர் ஜோன்மத்தயாஸ (கிறிஸ்தவர்) சேர் N. P. என்ஜினியர் (பார்ஸி), சர்தார் பலதேவ்சிங்(சீக்கியர்); ஜனாப் எம். ஏ ஜின்னா, நவாப்ஸதாலியாகத் அலிகான், காஜா சேர் நாஸிமுதீன், நவாப்சேர் மகமத் இஸ்மெயில்கான், ஜனாப் அப்துல்நிஷ்டர்.(முஸ்லிம்லீக்).

●

**சரத் சந்திரபோஸ் பிரச்னை**

இந்தப் பதினான்கு பேர்களில் 12 பேர்களின் பெயரைக் காங்கிரஸ் ஏற்கெனவே சிபாரிசு செய்திருக்கிறது. காங்கிரஸ் சார்பில் ஸ்ரீ ஜ-த் சரத் சந்திரபோஸைச் சிபாரிசு செய்தது. அதனை ஏற்காமல் இராஜப்பிரதிநிதி ஒறிசாப் பிரதமரான ஸ்ரீ ஹரிகிருஷ்ண மேத்தாப் அவர்களை நியமித்திருக்கிறார். ஸ்ரீ மேத்தாப் ஓர் மாகாணத்தின் பிரதம மந்திரியாயிருப்பதனால் அவரை இச்சந்தர்ப்பத்தில் விடமுடியாதாகவே, அவரிடத்துக்கு ஸ்ரீ சரத் சந்திரபோஸை நியமிக்கும்படி இராஜப்பிரதிநிதியைக் காங்கிரஸ் வற்புறுத்தலாம்.

●

**சமத்துவம் இல்லையே!**

இடைக்கால அரசாங்கத்தில் காங்கிரசுடன் சமத்துவம் கோரிய மிஸ்ரர் ஜின்னா இனி என்னசெய்வார். குறித்த 14 பேரில் 6 பேர் காங்கிரஸ்வாதிகள். சீக்கிய, கிறிஸ்தவ பார்சிகப் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டுள்ள மூன்று பிரமுகர்களும், அவர்கள் எக்கட்சியிற் சேராதவராயிருந்தாலும் காங்கிரஸ் அநுதாபிகள் என்பது எவருமறிந்த இரகசியம் ஐந்தே ஐந்து பேர்தான் முஸ்லீம் லீகிற்குக் கிடைத்துளது. ஆனால் எது எப்படியிருந்த போதிலும், ஜின்னா இந்த ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டு இடைக்கால அரசாங்கத்தில் சேருவார் என்று திடமாக நம்பலாம். காங்கிரசும் இவ்விஷயமாகச் சில சந்தேகங்களை நிவிர்த்தியாக்கியபின், இடைக்கால அரசாங்கத்திற் சேரக் கூடும். யார் சேர்ந்தால் என்ன, விட்டால் என்ன 26ம் திகதி இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டே விடும் என இராஜப்பிரதிநிதி கண்டிப்பாக அறிவித்துவிட்டார் எனவே, தர்க்க நியாயங்களுக்கு இடமின்றிக் கட்சிகள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இடைக்கால அரசாங்கத்தில் சேர்ந்து கொள்ளும்.

●

**ஸ்ரீ மகதாப் மறுத்தார்**

இடைக்கால அரசாங்கத்தில் நியமிக்கப்பட்டுள்ள ஒரிஸாப் பிரதமர் ஸ்ரீ ஹரி கிருஷ்ண மகதாப், தாம் இப்போது வகித்திருக்கும் பதவியை விடுத்து இராஜப்பிரதிநிதி விரும்பியபடி இடைக்கால அரசாங்கத்தில் பங்கு பற்றமுடியாது என்று அறிவித்துவிட்டார். எனவே காங்கிரஸ் விரும்பியபடி அவரின் இடத்துக்கு ஸ்ரீ ஜ-த் சரத் சந்திரபோஸ் இராசப்பிரதிநிதியால் நியமிக்கப்படலாம் என்று தெரிகிறது.

●

**தேசீய முஸ்லீம் இல்லாமைபற்றிக் கவலை**

இடைக்கால அரசாங்கத்தில் தேசீய முஸ்லீம் ஒருவரையேனும் இராசப் பிரதிநிதி நியமிக்காததையிட்டு காங்கிரஸ் வாதிகள் கவலைப்படுவதாகத் தெரிகிறது. எல்லைப்புறக் காந்தி கான் அப்துல் கபார்கானை அவசரமாக வரும்படி காங்கிரஸ் நிருவாக சபை கட்டளையிட்டிருக்கிறது. இவ் விஷயமாக அவரது அபிப்பிராயத்தைக் காங்கிரஸ் அறிய விரும்புகிறது.

●

**அடுத்த காங்கிரஸ் தலைவர்**

பண்டிதர் ஜவஹர்லால் இடைக்கால அரசாங்கத்திற் சேர்ந்தால், அடுத்த ஆண்டுக் காங்கிரஸ் தலைவராக அவர் இருத்தல் கஷ்டமாக முடியும்; எனவே இப்போது தலைவராகவுள்ள மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்களே மீண்டுந் தலைவராக நியமிக்கப்படலாம் என்று ஓர் செய்தி கூறுகிறது

## பொலிசார் மீது புகார்

### விபத்திற் சம்பந்தப்பட்டது யார்

**காயமடைந்தவர் மனைவியின் தந்தி**

(நமது நிருபர்)

காங்கேசன்துறைக்கும் பருத்தித்துறைக்கும் செல்லும் தெருவில் இருவர் இனம் தெரியாத ஓர் மோட்டர் காரால் மோதப்பட்டனர் என்றும் அவர்களில் ஒருவரான ஸ்ரீ சிங்காரசா மரணமடைந்தாரென்றும் ஓர் செய்தி வெளிவந்திருக்கிறது. அவ்விருவரும் தொண்டமானாறு சுதேச பாஷைப் பாடசாலை ஆசிரியர்கள் என்று தெரிகின்றது. ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியிற் சிகிச்சை பெறும் ஸ்ரீ சின்னத்தம்பியின் மனைவி இவ்விஷயமாக பொலிஸ் பகுதித்தலைவர்க்கும் உள்நாட்டு மந்திரிக்கும் கீழ்க்கண்ட தந்தியை அனுப்பியிருக்கிறார்.

'எனது கணவரும், சிங்காரசா என்பவரும் அகப்பட்ட விபத்தில் ஸ்ரீ சிங்காரசா இறந்துவிட்டார் எனது கணவர் ஆபத்தான நிலையிற் கிடக்கிறார். காரைச்செலுத்திய சாரதியையும், அதில் இருந்தவர்களையும் கண்டுபிடிப்பதற்குப் பொலிசார் முயற்சி செய்யவில்லை. இந்த விபத்தில் ஓர் பொலிஸ் சேவகனும் ஓர் ராணுவ ஸார்ஜன்ரும் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள் என்று எனக்குத்தெரிகிறது. திறமையான உத்தியோகத்தர் மூலமாக உடனே முயற்சி செய்யுமாறு பொலிசுக்கு உத்தரவிடக் கோருகிறேன்.

## 1½ கொத்து அரிசி?

### அடுத்த மாதம் அதிகரிப்பா

**நிலைமை இன்னும் திருப்தியில்லை**

வருகிற 23-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை எகிப்திலிருந்து 9000தொன் அரிசியுடன் கொழும்புக்கு ஓர் கப்பல் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பயனாக அடுத்த மாதம் தொடக்கமாக அரிசி விநியோக அளவை ஒன்றரைக் கொத்தாக உயர்த்தலாம் என்று தெரிகிறது. ஆனால் மாவின் நிலைமை மோசமாகி வருகிறதென்று கூறப்படுகிறது.

அரிசி விநியோகத்தால் அரசாங்கத்துக்கு ஆண்டுதோறும் 9 கோடிரூபா நட்டமேற்படுகிறபடியால் இந்தநட்டத்தை ஓரளவுக்குச் சரிப்படுத்த அரிசி விலையை உயர்த்த அரசினர் யோசிப்பதாயும் தெரிகிறது

### ஜாவாவுக்கு இந்தியத் துணிகள்

இந்தியாவுக்கு 5 லட்சம் தொன் அரிசி அனுப்ப நிச்சயித்ததையொட்டி, அந்நாட்டுக்கு இலவசமாகத் துணிகள் அனுப்ப பண்டிதர் ஜவஹர்லால் முயற்சியால் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பம்பாயில் உள்ள நண்பர்கள் சிலர் 200சிப்பம் துணிகள் தருவதாகப் பண்டிதர் நேருவுக்குக் கூறியிருக்கின்றனர். இவ் விஷயத்தை இந்தனேஷயப் பிரதமர் டக்ரர் ஷாரீருக்குத் தெரிவித்து சீக்கிரம் துணிகளை அனுப்ப வசதி செய்து தரும்படி இந்திய அரசினரைத் தாம் கேட்டிருப்பதாசப் பண்டிதர்நேரு அறிக்கை விடுத்துள்ளார்

### திருத்தம்

சென்ற 18-6 46 ல் வெளிவந்த இந்துசாதனப் பிரசுரம் 5-ம் பக்கத்தில் "இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்" விளம்பரத்தில் கையொப்பமிட்ட ஸ்ரீ பொ, நா திருநாவுக்கரசு, காவிரேட், வெள்ளவத்தை என்பதை காவிரேட், கல்கிசை எனத் திருத்திக்கொள்க.

### சங்காபிஷேகமும் மணவாளக்கோல உற்சவமும்

வண்-மேற்கு காட்டுத்துறை பகவதி மாரியம்பாள் கோவிலில் நிகழும் வியவருஷம் ஆனிமாசம் 8-உ (22-6 45) சனிக்கிழமை மத்தியானம் ஷெ அம்பாளுக்கு அஷ்டோத்தர சத சங்காபிஷேகமும் இரவு 8மணியளவில் வழக்கம்போல மணவாளக்கோல உற்சவமும் நடைபெறும்.

### மகோற்சவம்

புராதன புண்ணிய தலமாகிய புலோலிப் பசுபதீஸ்வரர் கோயிலில் நேற்று (20-6-46) துவசாரோகணமாகி மகோற்சவம் கிரமமாக நடைபெறுகின்றது. இந்த ஆனிமாசம் 20ந் திகதி ரதோற்சவமும் அடுத்த நாளாகிய உத்தர புண்ணிய தினத்தன்று நடராசர் அபிஷேகம் தீர்த்தோற்சவம் முதலியனவும் நடைபெறும்

### 1 லட்சர்பேர் வேலை நிறுத்தம்

உருளிவெளிச் சம்பவத்தை யொட்டி ஏற்பட்டுள்ள வேலை நிறுத்தம் இலங்கை எங்கணும் அதி தீவிரமாகப் பரவி வருகிறது இன்றுவரை ஏறக்குறைய 1 லட்சம் இந்தியத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

### மாலிகாஹேனை அரசினர் தமிழ்ப் பாடசாலை

13-6-46 வியாழக்கிழமை அரசர் பெருமானின் ஜெனனநாள்விழா ஷெ பாடசாலையில் விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது கூட்டத்துக்குக் குறித்தபாடசாலைத் தலைமையாசிரியர் திரு. வீ. வேலுப்பிள்ளை அவர்கள் சபாநாயகம் வகித்தனர்.

### இந்தியாவில் இலங்கைப் பிரதிநிதி

இலங்கை உயர்தர நீதிமன்றத் நதிபதிகளில் ஒருவாராய மிஸ்ரர் M. W. H டீ. சில்வா அவர்கள் இந்தியாவில் இலங்கை அரசாங்கப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

லைப்படாமலிருக்க நீர் ஏன் கவலைப்படுகிறீர்; நான் அறிந்தோ அறியாமையாலோ தவறுகள் செய்திருக்கக்கூடும்: என் சிறியதாயார் எனக்கு நேரில் என் குறைகளைச் சொல்லக்கூசி, உமக்குச் சொல்வதுபோற் சொல்லியிருக்கலாம்: ஆனால் நான் செய்யும் பிழை என்னவென்பதை நேரில் அறிந்து கொள்வேனானால் நான் இயன்றவரையிற் திருந்தி நடப்பேன்; அதையிட்டு நான் கவலைப்படவில்லை; இன்னமும் இயன்றவரையில் எங்கள் அம்மாவுடன் நான் இதமாகத்தான் நடக்க முயற்சி செய்யவேண்டும்; நீர் ஒன்றுக்கும் வருந்தவேண்டாம்; ஐயாவிடமும் இதைப்பற்றி ஏதும் பேசவேண்டாம்; பொறுமை கடலினும் பெரிது தங்கைச்சி; முற்பிறப்பில் நான் புண்ணியஞ் செய்தவளாயிருந்தால் என் பெற்றோரை நான் இந்தச் சின்ன வயசிற் பறிகொடுத்துக் கலங்கவேண்டி நேரிடுமோ......"என்று சொல்லி, என் தங்கையைத் தேற்றத் தொடங்கிய நானே கலங்க, அதனைக் கண்டு என் தங்கை தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு என் கண்ணீரையுந் துடைத்து என்னைத் தேற்றினாள்; இருவரும் ஒருவாறு தேறிக்கொண்டு எங்கள் கருமங்களைப் பார்த்தோம்; ஆனால் நான் ஒருவாறு தேறியிருந்தேனாயினும் கவலையைப் புறத்தே காட்டாது முகமலர்ச்சியோடு கூடியவள்போல் ஊடாடினேனெனினும், என் தங்கை அன்று தொடக்கம் முகவாட்டத்துடன் எந்த நேரமுங் காணப்பட்டாள்.

—வரும்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை கிழக்கு மார்க்கண்டு திருநாவுக்கரசு கைம்பெண் மாதப்பிரவல்லியம்மா பெட்டிசகாரி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 237ம் இலக்கப் பராபரிப்புத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1946ம் வருஷம் ஆடி மாசம் 6-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10½ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு மயிலிட்டிக்கோவிற்பற்று தையிட்டி இறை சித்தன் ஊரிக்காடும் இராமன் ஊரிக்காடும் மணலும் நிலப் பரப்பு 11 குளி 3 கல்வீடும் கிணறும் வான்பயிர்களும் எல்லைகிழக்கு அமெரிக்கன் மிஷனுக்குரிய ஆதனம், வடக்கு கடற்கரை, மேற்கு முத்துச்சாமிப்பிள்ளை பெண் தில்லையம்மாவுக்குரிய ஆதனம், தெற்கு ரோட்டு இதடங்கலும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்,
கொம்மிஷனர்.

வட்டுக்கோட்டை கிழக்கு,
6—6—1946.

(Mis 94 21)

WISE PARENTS USE — GRIPE-VIT-D — FOR BABIES — S.R. REMEDIES, TRICHY.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:
மொடேண் ஏஜென்சீஸ்,
சிலாபம், (இலங்கை)

(Mis 185, 31—31-12-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயத் தொண்டு

(சி.சரவணமுத்து, புங்குடுதீவு)

உடம்பின் வாழ்க்கைக்கு உணவு உறுதுணை அதுபோல உயிர்வாழ்க்கைக்கு சமயம் உறுதுணையாகும். அச்சமயங்களுள்ளும் எல்லாமாய் அல்லவுமாய் அதிபராபர னென்றவாய் விளங்கும் சிவபிரானை உணர்த்தி அவரோடு சம்பந்தப்பட்டிருப்பது நம் சைவசமயமேயாகும்.

இதுபற்றியே, சைவம் சிவனொடு சம்பந்தமென்றார் சைவம் வளர்த்த சம்பந்தமூர்த்தி. இத்துணைச் சிறப்புற்ற நம் சைவசமயமும் அதன் உயர்ந்த கொள்கைகளும் நம்மனோரால் கைவிடப்பட்டு, சூழும் அந்தகாரமாகிய இருளிலும் தோன்றிமறையும் மின்னல் வெளிச்சம் போலுறை இவ்வாழ்க்கையிலும், கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற மயக்க நிலையிலும் நின்று தவிக்கின்றோமல்லவா. இதனை எண்ணிப்பார்க்கும்போது உண்மை உணர்ச்சியுள்ள சைவன் திகைக்கப்படாமலிருக்க முடியுமா. இதனை எண்ணிப்பார்த்த தாயுமான பெருந்தகையார் எண்ணிலடங்கா சது பகிரொனும் ஆயிலுறு திருவருளிய மரவுபசவாய் என்று கதறினார். அத்தாயுமானப் பெருந்தகை தோன்றிய நாட்டில் உதித்தநாம் அவர் சந்ததியில் வந்த நாம் அவரின் சிறந்த இலட்சியங்களைப் போற்றும் நாம் ஒருதடவையேனும் எண்ணிப்பார்க்க வேண்டாமா; அப்படி எண்ணிப்பார்க்கும் தம் நெஞ்சறிவது பொய்யுறை. பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச்சுடும், அல்லவா.

ஆகையால் வீணே சிந்தனை செய்து வாழ நருந்தாவ படுகுழியில் வீழ்ந்து தவிக்க நேரிடுமல்லவா அசவே இன்றே சில ஆயத்தங்கள் செய்ய முயலுவோம்.

தமிழ் மொழிக்கும் சைவ சமயத்துக்கும் விளைநிலமாகிய நமது யாழ்ப்பாண நாட்டில் வாடி தகைகியிருக்கும் சைவப்பயிருக்கு நல்ல தண்ணீர் பாய்ச்சி செழிக்கச்செய்ய வேண்டும்.

அதற்கு வழி அறிவுடைப் பெரியோர்களையும், சைவத்திலும் தமிழிலும் பேரார்வங்கொண்ட அன்பர்களையும் கொண்ட நாசய பத்னைக்து பேருக்குக் குறையாத ஒரு சைவப்பிரசார அடியார் கூட்டம் ஒன்று ஏற்படுத்தி சைவப்பிரசாரம் செய்யவேண்டும். அத்திருக்கூட்டத்துள் சைவநெறி நின்றொழுகும் அடியார்களும், சைவக் குருமார்களும் இன்னும் வசதியுள்ளவர்களுமிருக்கவேண்டும். அவர்கள் நமது இலங்கை என்கின்ற மாங்கனி வடிவத்தின் மூக்குத்திபோல் திகழும் நெடுந்தீவு சென்று அங்கு உட்பட சைவப்பிரசங்கங்களும், சமய உபதேசங்களும் செய்து அங்கு வாடியிருக்கும் சைவப் பயிருக்கும், பிறர்வலைகளைக் கொள்ளப்பட்ட நம் மக்களுக்கும் மேற்கூறிய பிரசங்கமும் உபதேசமுமாகிய தண்ணீரை சைவ வெள்ளத்தைப் பாய்ச்சி செழிக்கச்செய்யவேண்டும். அப்படியே, நயினாதீவு அனலைதீவு முதலாய சப்த தீவுகளிலும் தென்மராட்சி யாழ்ப்பாண நாடு முழுவதும் சைவப் பிரசாரம் செய்யவேண்டும். சைவமாகிய பயிருக்கு நன்னீராகிய பிரசங்கமும் உபதேசமும் செய்ய வேண்டும்; அத்தோடு இலங்கையின் எந்த பாகத்திலே நம் தமிழ்ச்சாதி மக்கள் அவர்களின் சமயக் கொள்கைகளும் தட்டுக்கெட்ட நிலையிலிருக்கின்றதோ, அங்கெல்லாம் சென்று பிரசங்கங்கள் செய்து வழிபடுத்துவதோடு சமய உண்மைகளைத் தமக்கதேதே கொண்டு மெய்யடியார்கள் திருவாய்மலர்ந்தருளிய தேவார திருவாசகங்களையும் சித்தாந்த சாஸ்திரத்தின் உண்மைக் கருத்துக்களையும் புத்தகரூபமாக அச்சடித்து இலவசமாக வழங்கியும் நம் மக்களை நல்வழிப்படுத்த வேண்டும், அத்தோடு நம் சமயத்தவர்களில் உள்ள வறியவர்களின் நிலைமையை கவனித்து அவர்களுக்கு சமயக்கல்வி சமய உண்மை இவைகளைப் போதிக்கும் ஓர் ஸ்தாபனத்தையும் வறியவர்களை ஆதரிக்கும் அநாதச்சாலையையும் நிறுவவேண்டும். இப்படிப் பலதரப்பட்ட வழிகளில் நம் சைவசமயத்தை வளர்ப்பதற்குத் தொண்டு செய்வதாகும், நீதியுள்ள செல்வர்களும் அறிவுடைப் பெருமக்களும், ஆசிரிய தலைவர்களும், சமயபெரியார்களும், குருமார்களும் முன்வரவேண்டும்.

சமயம் வளர்ந்தால் நாடு வளரும் சமூகம் வளர நாட்டுமக்கள் செழிப்படைவார்கள் ஆரிய ஞானமைய பொன்னாகாரச் சிறப்பு இவை யாவும் சமயத்தின் ஆழ்ந்த பொக்கிஷத்திலூறி அமிழ்ந்தியிருக்கின்றது. ஆகவே நமது சைவசமயம் பண்டைப் பெருமையுடன் நிலைபெற நாம் மேற்காட்டிய செயலில் இன்றே இறங்கவேண்டும். சொல்லால் முழக்கிலோ சுகமில்லை. ஆகவே செயல் செய்து முன்னேறும் காலம் இதுவே. தாழ்த்தவேண்டாம். சமய உணர்ச்சியில்லாத வாழ்க்கை மிருகவாழ்க்கையே மனித வாழ்க்கையாகாது.

"காகமுறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டாகாரப் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏக உருவாய்க் கிடக்குதையோ இன்புற்றிருக்க. இனி, நாம் எடுத்த தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே"

சைவப்பெருமக்களே!

மேற்காட்டிய தொண்டு செய்வதற்கு முயலுகின்றோம். அதற்குரிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று சமீபத்தில் கூட ஆயத்தம் செய்கின்றோம். கூடும் தினத்தை பின்னர் அறிவிப்போம்.

## தென்மராட்சி வாலிபர் சங்கம்

மேற்படி சங்கப் பொதுக்கூட்டம் 16-6-46 மாலை 7½ மணியளவில் மீசாலை தெற்கு (சாவகச்சேரி) விக்னேஸ்வர வித்தியாசாலை மண்டபத்தில் ஸ்ரீ க. துரைராசா அவர்களின் தலைமையில் ஆரம்பமாயது. கடவுள் வணக்கம், காரியதரிசியின் அறிக்கை முதலியவற்றின் பின்னர் ஸ்ரீ ர. அருணாசலம் B A அவர்கள் தென்மராட்சியைப் பீடித்துள்ள பாரதூரமான குறைபாடுகளையும், அவற்றை நிவிர்த்திக்க வாலிபர்கள் செய்ய வேண்டிய சமூக சேவைகளையும், பாரதநாட்டிலுள்ள அனேக உதாரணங்களுடன் ஓர் விரிவுரை நடாத்தினார்.

பின்னர் பரிசோதகர் ஸ்ரீ P. சுப்பிரமணியமவர்கள் சமூக சங்கங்களின் லட்சியங்களை எடுத்துக் காட்டி ஓர் உபந்நியாசம் செய்தார்.

சாவகச்சேரி வடக்கு ஆசிரியர் ஸ்ரீ R.T சுப்பிரமணியமவர்கள் இதுவரை வாலிபர் செய்த சேவையைப் பற்றிக் கூறி மீசாலைக்குச் செய்ய வேண்டிய அவசிய சேவைகளை வாலிபர்கள் சாதிக்குமுன்னர் ஓர் கைத்தொழில் ஸ்தாபனத்தையும், ஓர் இலவச வாசிகசாலையையும் அவசியமாகத் திறக்க வேண்டுமென்று கூறினார்.

அதிகூறல், தலைவர் நிறைவுரை யிவற்றின்பின்னர் கடவுள் வணக்கத்துடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

கடித.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### சனி யூன் 22

காலை 7-15 கிராமபம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 ராமநாதபுரம் எம் என் கணேசபிள்ளை வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 ஏ ஜி செல்வம்பிள்ளை பாட்டு 8.30 சித்ரகானம் 9 முடிவு.

1 ராமநாதபுரம் எம் என் கணேசபிள்ளை வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 குரல் இசை 2 தமிழில் செய்திகள் 2-05 எம் ஆர் வாசவாம்மாள் பாட்டு 2.30 முடிவு.

மாலை: 5 எம் ஆர் வாசவாம்மாள் பாட்டு 5.40 திருவிளையாடல் புராணம் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 ஏ ஜி செல்வம்பிள்ளை பாட்டு 6.30 சித்ரகானம் இசைத்தட்டு 6-45 கிராம நிகழ்ச்சிகள் 7-15 கடைகளில் சாமான்கள் கிடைக்கும் நிலைமை 7-20 தமிழில் செய்திகள் 7-45 களக்காடு எஸ் ராமநாராயண ஐயர் பாட்டு 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஐரோப்பிய சங்கீதம் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

### ஞாயிறு ஜூன் 23

காலை: 7-15 கிராமபம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி எம் சண்முகசுந்தரம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருவிழிமிழலை சகோதரர்கள் நாகஸ்வரம் இசைத்தட்டு 8-20 மதுரை மணிஐயர் ஒலிப்பதிவு 9 முடிவு.

12 மாப்பிள்ளை வந்துவிட்டாரே இசைத்தட்டு தொகுப்பு 12.30 ஒலிபலர் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மாதர் பக்கம் 2 தமிழில் செய்திகள் 2.05 டி எம் ஷண்முகசுந்தரம் பாட்டு 2-20 முடிவு.

மாலை: 5 சாட்டியக்குடி ஆர் மீனாக்ஷிசுந்தரம் பாட்டு 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் வானிலை 6.15 கே சுப்பிரமணியன் வீணை 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7.15 கிராம அமைப்பு 7.30 தமிழில் செய்திகள் 7-45 சாட்டியக்குடி ஆர் மீனாட்சி சுந்தரம் பாட்டு 8-30 கே சுப்பிரமணியன் வீணை 9.10 அறிவிப்புகள் வானிலை 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 நாட்டுப் பாடல்கள் 10 இசைவேளை இசைத்தட்டு 10.30 முடிவு.

### திங்கள் ஜூன் 24

காலை: 7.15 கிராமபம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 ஏ பி கருப்பையா நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருப்பாண்டிக் கொடுமுடி 8-50 எம் எஸ் முத்தப்பா பாகவதர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 எம் எஸ் முத்தப்பா பாகவதர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 சோடக்கவி 2.30 முடிவு.

மாலை 5 ஏ பி கருப்பையா நாகஸ்வரம் 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6-15 தானவாத்பக்கச்சேரி 6-45 கிராம நிகழ்ச்சிகள் 7-15 ஜாதியும் வர்ணமும் 7.30 தமிழில் செய்திகள் 7-45 காரைக்குடி சாம்பசிவ ஐயர் வீணை 9.15 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9-45 டி பி ராமகிருஷ்ணன் பாட்டு 10-30 முடிவு.

### செவ்வாய் யூன் 25

காலை 7-15 கிராமபம் 7.20 தமிழில் செய்திகள் 7-30 வி ஆர் ரங்கநாதன் புல்லாங்குழல் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 எம் எஸ் தண்டபாணி தேசிகர் இசைத்தட்டு 8.30 பி ஆலமேலு அம்மாள் பாட்டு 9 முடிவு.

1 சதாபம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 வி எஸ் கிருஷ்ணமூர்த்தி செட்டியார் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 சோடக்கவி 2-30 முடிவு.

மாலை 5 வி எஸ் கிருஷ்ணமூர்த்தி செட்டியார் பாட்டு 5.40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 எம் சுலோசனா பாட்டு 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7 ஜாதியும் வர்ணமும் 7-30 தமிழில் செய்திகள் 7.45 அனைவருக்கும் சந்தவரம் 8 எம் சுலோசனா பாட்டு 8.30 வி ஆர் ரங்கநாதன் புல்லாங்குழல் 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஜே எம் ஆபதுல்கரீம் ஸிதார் 10 நேயர்கள் கேட்டவை இசைத்தட்டு 10.30 முடிவு.

## ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள்

திரு. சே. வெ. ஐம்புலிங்கம்பிள்ளை

இவர் நாவலர் மாணாக்கருள் ஒருவர் பெரியபுராணத்திற்கு ஓர் அகலவுரை எழுதியவர் இவரே. ஈழமண்டலப் புலவர் சரித்திரத்தில் இவரைப்பற்றி அதிகமாகத் தெரியவில்லையென்று எழுதப்பட்டுள்ளது. 50 ஆண்டுகளுக்கு முன்னர் பெரும் புலவராய்ச் சென்னையில் விளங்கிய இச்சுவாமிகளின் சரித்திரக் குறிப்பை 1894ம் ஆண்டில் வெளியான ஞானபானு என்னும் தமிழ்ப் பத்திரிகையின் இரண்டாவது சஞ்சிகையில் கண்டபடி இங்கே தருகின்றோம். இதனை மேற்படி சரித்திரத்தின் இரண்டாம் பதிப்பில் சேர்க்கவேண்டியது அவசியம்.

சிறப்பமைந்திருக்கும் ஈழமண்டலத்திலே யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையில் வேளாண்குலத்திலே வைரமுத்து பிள்ளைக்குச் சற்புத்திரராய்ப் பிறந்து ஆறுமுகம்பிள்ளை என்னுந் திருநாமம் பெற்று இளமையிலேயே இலக்கிய இலக்கணங் கற்றவர்; ஆறுமுகநாவலரிடம் கல்வி பயின்ற முதன் மாணவர் வரிசையில் ஒருவர். நல்லொழுக்கமுடையவர். திருவண்ணாமலை ஆதீனத்தைச் சேர்ந்த குன்றக்குடி மடத்தில அக்காலத்தில் விளங்கிய பொன்னம்பலம் தேசிகரிடம் துறவாச்சிரமம் பெற்று அவரிடம் சைவசித்தாந்த சாத்திரம் பயின்றவர். பிறகு வடமொழியிலும் தேர்ச்சி பெற்று சிவாகம இரகசியங்களை உணர்ந்தவர். அடக்கமென்னும் அருங்குணமுடையவராயும் அதிசாந்த மூர்த்தியாயும் இருந்தபடியால் சென்னையிலுள்ள வித்துவான்களாலும் பிரபுக்களாலும் நன்கு மதிக்கப்பட்டவர். காசி இராமேசுவரம் முதலிய சிவதலங்களை விதிப்படி தரிசித்தவர். அத்தலங்களைத் தரிசிக்கவேண்டிய முறைகளைக் காட்டும் தலயாத்திரையபராதுவிதி என்னும் நூலொன்று எழுதி அச்சிடுவித்தவர்.

பெரியபுராணத்திற்குப் பதவுரை விசேடவுரை முதலியவற்றை உலோகோபகாரமாக எழுதிக் கொடுத்துச் சென்னையிலிருந்த கிருஷ்ணசாமி முதலியாரென்பவர்மூலமாக மாதாந்த சஞ்சிகையாக வெளிப்படுத்தியவர்.

சென்னை காட்டுப் பிள்ளையார் கோயில் வீதியிலுள்ள திருவண்ணாமலை மடத்தில் சிவபுண்ணியங்களைச் செய்துகொண்டு பலகாலம் வசித்தவர். இப்பெரியார் ஜய வருஷம் சித்திரைமீ 19உ சோமவாரந்தினத்திலே குன்றக்குடியிலே சிவபதமடைந்தனர்.

இவரைப்போன்ற வேகரத்தினம் கிடைப்பது அரிது அரிது.

இக்குறிப்பு இவர் மாணவராகிய வி. சுந்தரமுதலியார் எழுதியது.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோனமுறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday June, 21, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org